பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5·00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 வைகாசி 27 செவ்வாய்க்கிழமை (09 06 1992) UTHAYAN – A Lively National Tamil Daily கதிர் 194

# அலம்பில் படை முன்னேறும் முயற்சி தங்கபுரத்துடன் தடுத்து நிறுத்தம்!

## ஏழு மணி நேரம் கடும் சமர்

### பவள் தகர்ப்பு; பல படையினர் பலி!

யாழ்ப்பாணம், ஜூன் 9

முல்லைத்திவு அலம்பில் பகுதியில் இருந்து குமுழமுனைப் பகுதியை நோக்கி ஸ்ரீலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட பெரும் இராணுவ நகர்வை தங்கபுரத்தில் வைத்து விடுதலைப் புலிகள் தடுத்து நிறுத்தினர்.

நேற்றுக் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை சுமார் 7 மணி நேரம் அங்கு இடம்பெற்ற கடும் சண்டையில் படையினரின் பவள் கவச வாகனம் ஒன்று முற்றாகச் சேதமாக்கப்பட்டது; பல படையினர் உயிரிழந்தனர்.

இரண்டு பொம்மர்கள், இரு ஹெலிகள், இரண்டு அவ்ரோக்கள் ஆகியவை மாறி மாறி குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்த—

ரி-56 ரக யுத்த தாங்கிகள், கவச வாகனங்கள் ஆகியவை பீரங்கித் தாக்குதல் நடத்த—

அவற்றின் உதவியுடன் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் முன்னேற முயன்றனர். ஆனால் விடுதலைப் புலிகள் தீரத்துடன் போராடி, முன்னேறும் முயற்சியைத் தடுத்து நிறுத்தினர் என்று தெரிவிக்கப்பட்டது. [உ-3]

### மூவர் வீரமரணம்

நேற்று அலம்பிலில் இருந்து முன்னேற முயன்ற படையினருடன் இடம்பெற்ற சண்டையில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் மூவர் வீரமரணமடைந்தனர்.

வெங்கடேஸ்வரன் அல்லது பாஸ்கரன் [முருகையா சிவகுரு-வவுனியா], றொபேட் [இராசநாயகம் இளந்தீபன் - மல்லாவி], செல்வகுமார் [கந்தையா சுந்தரலிங்கம் - நெடுங்கேணி] ஆகிய போராளிகளே வீரமரணமடைந்தவர்களாவர் [உ-3]

### மோதல்

அம்பாறை அக்கரைப்பற்று பகுதியில் நேற்று காலை விடுதலைப் புலிகளுக்கும், விசேட அதிரடிப் படையினருக்கும் இடையில் மோதல் இடம்பெற்றதாக கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. [உ-3]

## யாழ். கடலேரியில் மீனவர் சூட்டுக்குப் பலி!

### கடற்படையினர் அட்டகாசம்

யாழ்ப்பாணம், ஜூன் 9

மீன் பிடித்துக் கொண்டிருந்தவர்களை நோக்கி கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில், ஒரு மீனவர் கொல்லப்பட்டார். இருவர் காயமடைந்தனர். மற்றும் ஒருவர் இன்னும் கரை சேராததால் அவர் இறந்திருக்கலாம் அல்லது படையினரிடம் காயங்களுடன் பிடிபட்டிருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

நேற்று முன்தினம் இரவு பதினொரு மணியளவில் பூநகரிப் பகுதியில் உள்ள கல்முனைக்கும் மண்டைதீவுக்கும் இடையில் இச்சம்பவம் நடந்தது.

இராணுவ நடவடிக்கை காரணமாக மண்டைதீவில் இருந்து இடம்பெயர்ந்து பாஷையூரில் தங்கியிருந்த மரியாம்பிள்ளை மரியராசா [வயது 40] என்பவரே இறந்தவர் ஆவார்.

குருநகரைச் சேர்ந்த ஐயாத்துரை ஜேசுதாசன் [வயது 21] என்பவரே இதுவரை கரை சேராதவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

(6ஆம் பக்கம் பார்க்க)

## காரைநகரில் 2மீனவர் கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 9

காரைநகர் கடற்பகுதியில் நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் மீன்பிடித்துக் கொண்டிருந்த இரு மீனவர்கள் படையினரால் கைது செய்யப்பட்டனர். அவர்களின் வள்ளத்தையும் படையினர் கொண்டு சென்றனர்.

காரைநகர் கடற்படை முகாமில் இருந்து வந்த இராணுவத்தினரே அவர்களைப் பிடித்துச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ-3]

## குமுழமுனையில் 11 படையினர் பலி!

கொழும்பு, ஜூன் 9

முல்லைத்திவு மாவட்டம் குமுழமுனைப் பகுதியில் கடந்த சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் இடம்பெற்ற மோதல்களில் ஆகக் குறைந்தது எட்டுப் படையினர் உயிரிழந்தனர்.

இச்சண்டையில் இராணுவச் சிப்பாய் ஒருவரே உயிரிழந்ததாக பாதுகாப்பு வட்டாரங்கள் முதலில் தெரிவித்தன.

ஆனால் சனி இரவு 7 படையினரின் சடலங்களும், ஞாயிறு காலை ஒரு சடலமுமாக மொத்தம் எட்டுச் சடலங்கள் அநுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு எடுத்துவரப்பட்டதாகவும்—

படுகாயமடைந்த 21 படையினர் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டதாகவும் ஆஸ்பத்திரி

[6ஆம் பக்கம் பார்க்க]

## தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்க இணக்கம்

யாழ்ப்பாணம், ஜூன் 9

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் கடமையாற்றும் தொண்டர் ஆசிரியர்களுக்கு விரைவில் நிரந்தர நியமனம் வழங்குவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் தொண்டர் ஆசிரியர் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்கங்களின் பிரதிநிதிகளும், இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளும் கொழும்பில் நடத்திய பேச்சுக்களை அடுத்து இணக்கம் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

நிரந்தர நியமனம் பெறத் தகுதியுடைய தொண்டர் ஆசிரியர்களின் பட்டியல்களை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டக் கல்விப் பணிப்பாளர்கள் வவுனியாவுக்கு எடுத்துச் செல்வர் என்றும் —

அங்கு வைத்து கல்விச் சேவை ஆணைக்குழுப் பிரதி

[6ஆம் பக்கம் பார்க்க]

## தெல்லிப்பழையில் சூடு! மல்லாகத்தில் ஒருவர் காயம்!!

யாழ்ப்பாணம், ஜூன் 9

தெல்லிப்பழைப் பகுதியில் நிலைகொண்டுள்ள படையினர் நேற்று முன்தினம் இரவு குடியிருப்புக்களை நோக்கி தொடர்ந்து ஷெல் மற்றும் துப்பாக்கி தாக்குதல்களை நடத்தினர். அவ்வப்போது 'பரா' வெளிச்சக் குண்டுகளும் ஏவி விடப்பட்டன.

படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் மல்லாகத்தில் ஒருவர் காயமடைந்தார்.

தெல்லிப்பழை கிழக்கு சித்தியம்புளியடியில் இருந்து இடம்பெயர்ந்த நாகமுத்து ஐயம்பிள்ளை [வயது 55] என்பவரே காயமடைந்தவர் ஆவார். இவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். [உ-3-15]

# வடக்கு - கிழக்கு இணைப்புக்கு எதிராகவே தெரிவுக் குழுவிடம் ஐ. தே. க. ஆலோசனை!

### ஏனைய கட்சிகளின் கருத்துக்கள் குழப்பமானவை!!

கொழும்பு, ஜூன் 9

ஐக்கிய தேசியக் கட்சியினர் தெரிவுக்குழுவிடம் வடக்கு-கிழக்கு இணைப்புக்கு எதிராகவே ஆலோசனை தெரிவித்துள்ளது.

இவ்விடயத்தை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த திரு. அநுரா பண்டாரநாயக்கா பகிரங்கப்படுத்தியுள்ளார்.

''சண்டே ஐலண்ட்'' பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றின்போது திரு. அநுரா இதனைத் தெரிவித்திருக்கிறார்.

''ஐக்கிய தேசியக் [illegible] ளர் முதல் தடவையாக வடக்கு - கிழக்கு இணைப்புக்கு எதிராகத் தெளிவான நிலைப்பாட்டை எடுத்துள்ளனர். முன்னர் அவர்கள் இது விடயத்தில் தெளிவற்றவர்களாக இருந்தார்கள்'' என்று [illegible] விவரித்திருக்கிறார்.

ஸ்ரீ. ல. சு கட்சி நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை பகிஷ்கரிப்பது தொடர்பாக அவரிடம் கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன.

அநுரா தமது பேட்டியில் தெரியப்படுத்தியிருக்கும் ஏனைய முக்கிய அம்சங்கள் வருமாறு.

★ கடந்த பதினைந்து வருடங்களாக ஐ. தே. கட்சி தொடர்ந்து பதவியில் இருந்து வருகிறது ஆனால் இது வரை அரசு இனப்பிரச்சினைக்குரிய தீர்வாக யோசனை எதனையும்

[6ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருக! வருக!!

சுழிபுரம் பறாளாய்

ஈசுர விநாயகர் தேவஸ்தான

நவகுண்ட பக்ஷ சம்புரோக்ஷண

## மகா கும்பாபிஷேகம்

காலம் : 11 - 06 - 1992 வியாழக்கிழமை
நேரம் : பகல் 10.00 — 11.05 வரையுள்ள சுபநேரம்

[21333] — தேவஸ்தானம் —



முதலாவது

## பிறந்த நாள் வாழ்த்து



## செல்வரத்தினம் ஜனகன்

தென் புலோலி முருகன் கோவிலடியைச் சேர்ந்த செல்வரத்தினம் ஜெயறோகினி தம்பதியினரின் செல்வப் புதல்வன் ஜனகன் இன்று (09-06-1992) தனது முதலாவது பிறந்த நாளை யாழ்ப்பாணம் பிறவுண் றோட், 1ஆம் ஒழுங்கையிலுள்ள தனது இல்லத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அம்மா, அப்பா, பெரியப்பம்மா, அம்மம்மா, அம்மப்பா, பாப்பாச் சித்தி, பெரியமாமா, அத்தை, மச்சாள், மச்சான்மார் (பிரான்ஸ்), சின்ன மாமா, ஆசைமாமா (ஜேர்மனி), இளைய மாமா (நோர்வே) ஆகியோருடன் பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், அண்ணன்மார், அக்காமார், மாமாமார், அத்தைமார், மச்சான்மார், மச்சாள்மார், மற்றும் உற்றார், உறவினர், யாவரும் பல்கலையும் பெற்று, பல்லாண்டு காலம் நீடூழிவாழ எல்லாம் வல்ல டன்னிருவிழிவேலனை வேண்டி வாழ்த்துகின்றனர்.

[21229]


# இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 9

வல்வைமற்றும் பகுதிகளின் மீது ஸ்ரீலங்காப் படையினர் கடந்த மாத இறுதியில் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகளின் போது பலியான தொழில்நுட்பக் கல்லூரியைச் சேர்ந்த — மூன்று அப்பாவி மாணவர்கள் நினைவாக இன்று அஞ்சலிக் கூட்டம் ஒன்று நடைபெறவிருக்கிறது.

கல்லூரி மண்டபத்தில் இன்று காலை 10 மணியளவில் இக்கூட்டம் நடைபெறும் என தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் அவை வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

★ ★ ★

யாழ். பிரவுண் றோட் டறக்ட் கழகத்தின் ''சுகநலம்'' கூத்து கல்லூரி மாணவர்களுக்காக இன்று யாழ். கன்னியர் மடம் (தமிழ்) பாடசாலையிலும், சுண்டுக்குளி மகளிர் கல்லூரியிலும், நடத்தப்படும்

இரவு நிகழ்ச்சியாக யாழ். தட்டாதெருச் சந்தியில் உள்ள கலாஜோதி சனசமூக நிலைய திறந்தவெளி அரங்கில் இக்கூத்து நடைபெறும். [உ]

# நாளை

யாழ்ப்பாணம், ஜூன் 9

சித்தங்கேணி பிளவத்தை அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டிகள் நாளை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறும். [உ]

## ஐ. தே. க. அமைப்பாளர் நியமனம்

பொரளை நாடாளுமன்றத் தொகுதிக்கான ஐ. தே. க. அமைப்பாளராக ஜயந்தா டீ சில்வா நியமிக்கப்பட்டிருக்கிறார் இத்தொகுதியின் அமைப்பாளராக தற்போதைய சபாநாயகர் எம். எச். முஹம்மது இருந்து வந்தார். சபாநாயகராகப் பதவி ஏற்றதைத் தொடர்ந்த ஜனாப் முஹம்மது அமைப்பாளர் பதவியைத் துறந்தார். [த-எ]

## நாடாளுமன்றம் இன்று கூடும்

கொழும்பு, ஜூன் 9

நாடாளுமன்ற அமர்வு இன்று திட்டமிட்டபடி நடைபெறும் என சபை முதல்வரும் அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். [உ-5]

# மென்மையாகப் பேசி கடுமையாகத் தாக்குவது!

## பிரேமாவின் அணுகுமுறை இதுவாம்

கொழும்பு, ஜூன் 9

''மென்மையாகப் பேசி, கடுமையாகத் தாக்குவது'' — இதுதான் ஜனாதிபதியின் அணுகுமுறை. ஜே. வி. பி. இயக்கம் இம்முறையில் வெற்றிகரமாக அழிக்கப்பட்டது. இனப்பிரச்சினைச் சகதியில் அவரால் வெற்றி காணமுடியுமா?

—இவ்வாறு கேள்வி எழுப்பியிருக்கிறார். 'சண்டே ஐலண்ட்' '' கட்டுரையாளர் 'தராகி'.

வவுனியாவில் பேசுகையில்—

''எவரையும் தோற்கடிப்பது எனது விருப்பமில்லை; அனைவரையும் வெற்றி பெறச் செய்வதே எனது விருப்பம்'' — என்று ஜனாதிபதி கூறினார்.

ஆனால் அன்றைய தினம்— கட்டுநாயக்கா விமான தளத்தில் இருந்து 'எவ் - 7' சுப்பர் சோனிக் குண்டு வீச்சு விமானங்கள் யாழ்ப்பாணம் சென்றன. ஒவ்வொரு விமானத்திலும் ஒவ்வொன்றும் 250 இறாத்தல் நிறையுடைய நான்கு குண்டுகள் ஒரு தடவையில் எடுத்துச் செல்லப்பட்டன

— இவ்வாறு 'தராகி' தமது கட்டுரையில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மீதான இராணுவ அழுத்தம் (Thrust) ஓர் அரசியல் முடிவே என்றும் அவர் குறிப்பிட்டார். (ஐ-எ)

## தொழில்நுட்பக் கல்லூரியில்

# பரீட்சை எழுதுவதற்கு வந்த மாணவர்கள் ஏமாற்றம்!

## வினாத்தாள்கள் வந்து சேரவில்லை

யாழ்ப்பாணம், ஜூன் 9

யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் நேற்று நடைபெறவிருந்த பரீட்சைக்கான வினாத்தாள்கள் வந்து சேரவில்லை. இதனால் பரீட்சை எழுதுவதற்கு வந்த மாணவர்கள் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

பரீட்சைக்குத் தோற்ற நேற்றுக் காலையே மாணவர்கள் தொழில்நுட்பக் கல்லூரியில் கூடினர். பகல் ஒரு மணிக்கு பரீட்சை நடைபெற ஏற்பாடாகியிருந்தது.

''வினாத்தாள்கள் கொழும்பில் இருந்து வந்துகொண்டிருக்கின்றன. பரீட்சை திட்டமிட்டபடி நடக்கும்'' — என்று விளம்பரப்பலகையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆனால் வினாத்தாள்கள் மாலை வரை வந்து சேராததால், பரீட்சை நடக்கவில்லை. மாணவர்கள் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

# சுதந்திரக் கட்சிக்குள் பதவிகளுக்குப் போட்டி!

கொழும்பு, ஜூன் 9

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவிக்கு மும்முனைப் போட்டி ஏற்படலாம் என்று சொல்லப்படுகின்றது.

தென்பகுதி சுதந்திரக் கட்சி எம். பியான மஹிந்த ராஜபக்ஷா இப்பதவிக்குப் போட்டியிடும் முயற்சியில் தீவிரமாக இறங்கியுள்ளார் என்றும்—

தற்போது செயலாளராக உள்ள தர்மசிறி சேனநாயக்காவும் தானும் போட்டியிட

[ 6ஆம் பக்கம் பார்க்க]


இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ். கிளை, தலைமையகம்

## ஓட்டுனர்

பத்து வருடங்கள் கனரகவாகனம் ஓட்டி அனுபவமுள்ளவர்கள் மாத்திரம் மேற்படி பதவிக்கு தமது விண்ணப்பங்களை 16-06-92 க்கு முன் எமக்கு கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவும். இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை 18-06-92 முற்பகல் 10.00 மணிக்கு எமது பணிமனையில் நடைபெறும் தனித்தனி கடிதங்கள் அனுப்பப்பட மாட்டா.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
08-06-92

ச. சிவானந்தராசா
கௌரவ செயலாளர்
[சி/2101]



## பாஷாண உத்வாசனமும் சபிண்டீகரணமும்

## பொன்னையா வேலும் மயிலும்

25-5-92இல் சிவபதமெய்திய எமது குல விளக்காம் அமரர் பொ. வேலும்மயிலும் (இளைப்பாறிய அதிபர்) அவர்களது பாஷாண உத்வாசனக் கிரியைகள் இன்று அதிகாலையிலும், சபிண்டீகரணக் கிரியைகள் நாளை புதன்கிழமை நண்பகலும் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

அமரரது இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும், அதற்கான பணிகளைச் செய்து உதவியவர்களுக்கும் எமது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

''ருத்திர பவனம்'',
செட்டிய குறிச்சி
அக்கவேலி தெற்கு, அச்சுவேலி.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

[21337]



உ

# ★ திருமண அழைப்பு ★

அன்புடையீர்,

நிகழும் பூரண ஆங்கிரச வருடம் வைகாசித் திங்கள் 29 ஆம் நாள் (11-06-1992) வியாழக்கிழமை பகல் 11-39 மணிமுதல் 12-18 மணி வரை வரும் சிங்கலக்கின
★ சுப முகூர்த்த வேளையில் ★

| எமது புதல்வன் | | எமது ஏக புத்திரி |
|---|---|---|
| திருநிறை செல்வன் | | திருநிறை செல்வி |
| **ரவீந்திரன்** (B. Com) | | **நளினி** (B. Com.) |
| அவர்களுக்கும் | | அவர்களுக்கும் |

திருவருள் துணை கொண்டு மணமகள் இல்லத்தில் திருமாங்கல்யதாரணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதரராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்தேகுமாறு
★ அன்புடன் அழைக்கின்றோம். ★

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்.

திரு. திருமதி சுப்பிரமணியம்,
(பிராந்திய வைத்திய உத்தியோகத்தர்),
23, வித்தியாலயம் லேன்,
திருகோணமலை.

48, (21/A) சபாபதி லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

திரு. திருமதி சிவராஜா,
(ஓய்வு பெற்ற களஞ்சிய காப்பாளர்),
49/7, விக்வந் தெரு வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

[21327]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெல்லிப்பழை பகுதியில் யுத்தத்தை தொடர முடியாத நிலை

## சரத் முனசிங்க கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 9

"வடபகுதியில் இராணுவ நடவடிக்கை நிறுத்தப்படவில்லை. தெல்லிப்பழைப் பகுதி பாதுகாப்புப்படையினருக்கு பரிச்சயமில்லாத புதிய பிரதேசமாதலால் தொடர்ச்சியாக யுத்தத்தில் ஈடுபட முடியாதிருக்கிறது"

இப்படிக் கூறினார் கூட்டுப்படைத் தலைமையக அதிகாரியான கேர்ணல் சரத் முனசிங்க.

கடந்த சனியன்று அவர் செய்தியாளர்களிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தெல்லிப்பழைப் பகுதியில் தொடர்ந்து இரண்டு அல்லது மூன்று நாள் நடைபெற்ற யுத்தத்தின் பின்னர் படையணிகளை ஒழுங்கமைத்தல், கைப்பற்றிய பகுதிகளைப் பலப்படுத்துதல், காயமடைந்த படையினரை சிகிச்சைக்கு அப்புறப்படுத்தல், உணவு, வெடிமருந்துப் பொருள்களை விநியோகித்தல் முதலியவற்றைச் சவளிப்பதற்கு இரண்டு அல்லது மூன்று நாட்கள் தாமதிக்க வேண்டி ஏற்படுகிறது என்றார் அவர்.

முல்லைத்தீவில் மீண்டும் இராணுவ நடவடிக்கை சனிக்கிழமை காலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

படை அணியினரை ஒழுங்கமைப்பதிலும், நிலைகளைப் பலப்படுத்துவதிலும் இரண்டு நாட்கள் ஈடுபட்ட படையினர் பின்னர் புலிகளைத் தேடி அழிக்கும் நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பித்துள்ளனர்.

அலம்பிலுக்கு தெற்கே படைகள் முன்னேறும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன. வவுனியா, மன்னார், கிழக்கு மாகாணம் ஆகிய பகுதிகளிலும் ஆங்காங்கே ரோந்து நடவடிக்கைகள் நடைபெறுகின்றன.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார் [இ-3]

# நாடாளுமன்றக் குழுவில் இருந்து ஐ. தே. க. எம். பி வெளியேற்றம்

## லலித் குழுவுக்கு ஆதரவாம்

கொழும்பு, ஜூன் 9

ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்றக் குழுவில் இருந்து கொழும்பு மாவட்ட எம். பி. ஸ்ரீநாத் குமாரசிங்காவை வெளியேற்றுவது என்று கட்சியின் தலைமைப்பீடம் முடிவு எடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

புதிதாக உருவான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் பொதுக் கூட்டங்களிலும், அந்த முன்னணியின் நடவடிக்கைகளிலும் குமாரசிங்கா கலந்து கொண்டதாக அவர் மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

ஆளும் கட்சியில் இருந்து சில எம். பிக்கள் வெளியேற்றப்பட்டதைத் தொடர்ந்து காலியான எம். பி பதவிகளில் ஒன்றுக்கு, அடுத்ததாக கூடுதல் வாக்குகளைப் பெற்றவர் என்ற அடிப்படையில் ஸ்ரீநாத் குமாரசிங்கா நியமிக்கப்பட்டார்.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியுடன் தொடர்பு வைத்திருந்த குற்றச் சாட்டுக்கு இலக்காகியுள்ள ஐந்து மாகாண சபை உறுப்பினர்களும் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து வெளியேற்றப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது [இ-எ]

# அடுத்த நடவடிக்கை குறித்து ஆராயப்படுகிறதாம்

கொழும்பு, ஜூன் 9

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் அடுத்து மேற்கொள்ளப்படவிருக்கும் இராணுவ நடவடிக்கை குறித்து உயர்மட்ட இராணுவ அதிகாரிகள் ஆராய்ந்து வருகின்றனர்.

இப்படி 'சண்டே ஒப்சேவர்' செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கு வந்த உயர்மட்ட இராணுவ அதிகாரிகள் புதிய தாக்குதல் குறித்து படை அதிகாரிகளுடன் ஆராய்ந்தனர் என்றும் —

எங்கு, எப்போது இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பது இரகசியமாக உள்ளதாகவும்—மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-3)

# ஒஸி உட்பட 10 உறுப்பினர் கட்சியிலிருந்து வெளியேற்றம்

## மக்கள் கட்சியின் மத்திய செயற்குழு முடிவு

கொழும்பு ஜூன் 9

ஸ்ரீலங்கா மக்கள் கட்சியில் இருந்து திரு. ஒஸி அபயகுணசேகரா உட்பட பத்து உறுப்பினர்களை வெளியேற்றுவது என்ற புதிய முடிவை அக்கட்சியின் மத்திய செயற்குழு எடுத்துள்ளது

இதனைத் தொடர்ந்து கட்சியின் பொதுச் செயலாளர் வை. பி. டி சில்வா அந்தப் பத்துப் பேருக்கும் வெளியேற்ற உத்தரவுக் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளார்.

ஒஸி அபயகுணசேகராவையும் வேறு மூன்று பேரையும் மக்கள் கட்சி மத்திய செயற்குழு முன்னர் இடைநிறுத்தி வைத்திருந்தது. அதனை எதிர்த்து அவர்கள் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தனர். அவ்வழக்கில் அந்த இடைநிறுத்த உத்தரவு செல்லாது என்று நீதிமன்றம் தீர்மானித்தது.

பின்னர் அவர்கள் கட்சியில் மீண்டும் சேர்க்கப்பட்டிருந்தனர். மீண்டும் ஒஸி அபயகுணசேகராவும் அவர் தலைமையிலான வேறு ஒன்பது பேரும் கட்சி விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக கூறி கட்சியின் மத்திய செயற்குழு அவர்களை வெளியேற்றும் முடிவை எடுத்துள்ளது. கட்சி உறுப்பினராக இருந்து கொண்டு ஐக்கிய தேசியக் கட்சியை பகிரங்கமாக ஆதரித்து பேசி வந்ததாக அவர்கள் மீது குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

கட்சிக்குள் தனிப் பிரிவு ஒன்றை அமைத்துச் செயற்பட்டதாக ஒஸி அபயகுணசேகரா மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. [இ-எ]

# தமிழ் ரயில் பயணிகளிடம் கத்தி முனையில் கொள்ளை

கொழும்பு, ஜூன் 9

கொழும்பு கோட்டையில் இருந்து தினமும் இரவு வவுனியா செல்லும் ரயிலில், தமிழ் பயணிகளிடம் கத்தி முனையில் கொள்ளையிடும் சம்பவங்கள் அதிகரித்திருப்பதாக கொழும்பு தமிழ் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மருதானையில் இருந்து கோட்டை ரயில் நிலையம் வரும் இந்த ரயிலில் என்ஜின் மறுமுனையில் இணைக்கப்படுவதற்காகத் தனியாகப் பிரிந்து செல்லும் போது பெட்டிகளுக்குள் மின்சாரம் துண்டிக்கப்படுவது வழக்கம்.

அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பெட்டிகளுக்குள் புகும் கொள்ளையர்கள் பயணிகளை மிரட்டிப் பணம், நகை போன்றவற்றைப் பறித்து வருவதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

இதே வேளை—

வவுனியா செல்வதற்காக கோட்டைப் புகையிரத நிலையத்திற்கு இரவு வந்த தமிழ்ப் பயணி ஒருவரிடமிருந்து 96 ஆயிரம் ரூபா பணத்தையும் 35 ஆயிரம் பெறுமதியான தங்க நகைகளையும் இருவர் தந்திரமாகக் கொள்ளையடித்துச் சென்றனர் என்றும்—

சி. ஐ டிபினர் என்ற போர்வையில் திருடர்கள் இங்கு நடமாடுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது [த-5]

# ஒஸியும் ஆதரவாளர்களும் ஐ. தே. கவில் இணையலாம்

கொழும்பு ஜூன் 9

ஸ்ரீலங்கா மக்கள் கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்ட திரு. ஒஸி அபயகுணசேகராவும் அவரது ஆதரவாளர்களும் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொள்வார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது

இந்த ஆண்டு இறுதியில் நடைபெறவிருக்கும் மாகாண சபைத் தேர்தல்களில் இவர்கள் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர்களாகப் போட்டியிடுவார்கள் என்றும் கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

[இ-எ]

# 1,500 லீற்றர் என்ஜின் ஒயில் இராமேஸ்வரத்தில் சிக்கியது

சென்னை, ஜூன் 9

இராமேஸ்வரத்தில் பல்வேறு இடங்களில் இருந்து கடந்த சனி இரவு 1,500 லீற்றர் என்ஜின் ஒயில் கைப்பற்றப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

இலங்கைக்குக் கடத்திச் செல்லவே இந்த என்ஜின் ஒயில் வைக்கப்பட்டிருந்ததாகவும், இது தொடர்பாக ஒருவர் கடலோரக் காவல் படையினரால் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதே வேளை —

பேரவைக் கோட்டை என்ற கடலோரக் கிராமப் பகுதியில் சக்தி வாய்ந்த வெடிகுண்டுகள் செய்யப் பயன்படும் மருந்துகள் அடங்கிய பெரிய பொதி ஒன்றும் கண்டெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. [த]


உ
சிவமயம்

# திருமணத் திருமுகம்

அன்புடையீர்!

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் ஆங்கிரஸ வருஷம் வைகாசி மாதம் 29 ஆம் நாள் (11-06-1992) வியாழக்கிழமை பகல் 11 மணி 39 நிமிஷம் முதல் 12 மணி 18 நிமிஷம் வரையுள்ள சிங்க லக்கின சுபமுகூர்த்தத்தில்,

எமது புத்திரன்
சிரஞ்சீவி
**ஜெயராம சர்மா**
அவர்களுக்கு
(வளலாய் சித்தி விநாயகர் தேவஸ்தானம்)

சுழிபுரம்
பிரம்மஸ்ரீ இரகுநாதக் குருக்கள்
அவர்களின் புத்திரி
சௌபாக்கியவதி
**யோகமலர்**
அவர்களை

எல்லாம் வல்ல விநாயகப் பெருமான் திருவருட்துணை கொண்டு கன்னிகாதானம், பாணிக்கிரகணம், மாங்கல்யதாரணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதனால், அத்தருணம் தாங்கள் குடும்ப சமேதராய் வருகைதந்து, மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

| | | |
|---|---|---|
| சமாவர்த்தனம்: | 11-06-1992 | வியாழன் காலை 7-00 மணி மணமகன் இல்லம் |
| முகூர்த்தம்: | 11-06-1992 | வியாழன் பகல் 11-39 முதல் 12-18 வரை - மணமகள் இல்லம் |
| வரவேற்புபசாரம் | 11 06-1992 | வியாழன் மாலை 3-00 மணி மணமகன் இல்லம் |

- சுபம் -

இங்ஙனம்:
தங்கள் நல்வரவை நாடும்

பிரம்மஸ்ரீ. நா. கந்தசாமிக் குருக்கள்,
(வளலாய் விநாயகர் தேவஸ்தானம்)
வாய்க்காற்றரவை பிள்ளையார் கோவிலடி,
தாவடி வடக்கு, இணுவில்

(21313)



# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## A/L கலை, வர்த்தக வகுப்புகள்

**93 DAY CLASSES**
(8-00 — 3-00)

ஆரம்பம்: 11 - 06 - 1992
வியாழன்

பொருளியல் — திரு. க. கலாகரன்
கணக்கியல் — திரு. S. K. பிரபாகரன்
வர்த்தகம் — திரு. இரகுநாதன்
அளவையியல் — திரு. A பிரபாகரன்

மற்றும் அனைத்து பாடங்களும்:

★ பாடத்திட்டம் அலகு 1 இலிருந்து ஆரம்பம்.
★ பாடசாலை செல்லாத மாணவர்களின் நன்மை கருதி முற்றிலும் பாடசாலை வசதிகளுடன்.
★ மாணவர்கள் முன் கூட்டியே அனுமதிகளைப் பெறவும்.
★ விடுதி வசதி அளிக்கப்படும்.

(சி-2659)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

கந்தையா முருகேந்திரனின் அடையாள அட்டை 5-6-92 ஆம் திகதி அம்மன் வீதிக்கும் மானிப்பாய் வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஆரியகுளத்தடி ''அன்னை மரக்காலை'' யில் தயவு செய்து ஒப்படைக்கவும். [21322]

## அச்சுக் கோர்ப்பாளர் தேவை

அச்சுக் கோர்ப்பாளர் தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கவும். பாரதி பதிப்பகம் (A. B. Printers), 430 காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [சி/2667]

## இலவச திருமண சேவை

38 வயது, ஆயிலியம், செவ்வாய் 4, ஆசிரியைக்கு ஏற்ற அரச தனியார்துறை மணமகன் தேவை. பல மதங்களில், தரங்களில் மணமக்கள் உண்டு. து. விமலா, யாழ்/ நாச்சிமார் கோவிலடி. [4740]

33 வயது, பூசம், செவ்வாய் 5, M. B. B. S. வைத்தியருக்கு, Professional தரத்தில் மணமகன் தேவை. தகுந்த சீதனம் வழங்கப்படும். தொடர்பு: ஞாயிறு காலையில். து. விமலா, யாழ்/நாச்சிமார் கோவிலடி. [4742]

## அன்பளிப்பு நாவல்

மீரா பிரசுரங்களில் இணைக்கப்பட்டிருக்கும் ஐந்து கூப்பன்கள் சேர்ந்ததும் மீரா விற்பனையாளரிடம் கொடுத்து ரூபா 50/- பெறுமதியான மீரா நாவலை அன்பளிப்பாகப் பெறுங்கள். விற்பனையாகின்றது. ''மீண்டும் புதிதாய்ப் பிறப்போம்'' சிதம்பர திருச்செந்திநாதன். [21321]

## சோதிடம்

எத்தகைய தீராத கஷ்ட நஷ்டங்களும், தடைகளும் நீங்க அதிர்ஷ்டம் அழைக்கிறது. விநாயகப்பெருமானின் அருட்சக்தி பொய்யாமொழியாக வழங்குகிறது. பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம். ஸ்ரீ மாவை விநாயகர் சோதிட நிலையம், 96 கோவில் வீதி, [ஸ்ரீகைலாச பிள்ளையார் கோவில் சந்தி] நல்லூர். பகல் 9-00 மணி — 2 மணி வரை. [21293]

## விசேட பரீட்சை

கொழும்பு, ஜூன் 9

பாடசாலை அதிபர் தரம் I, தரம் II ஆகியவற்றுக்கான வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சை விசேடமாக வடபகுதிக்கு நடத்தப்படும்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இதனை அறிவித்துள்ளது. [த]

## காணாமற்போன விடைத்தாள்

கொழும்புப் பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்ட 4 ஆம் வருட பரீட்சைகளில் இடம்பெற்ற பாடம் ஒன்றுக்கான விடைத்தாள்கள் காணாமற் போய் விட்டன என்று சொல்லப்படுகிறது.

அப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் ஒருவர் வெளிநாடு சென்றதற்கும் அவ் விடைத்தாள்கள் காணாமற்போனதற்கும் தொடர்புண்டா என்ற கேள்வியும் எழுந்துள்ளதாம். [இ-எ]

# 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில்: 15 — 10 — 1924



ஆண்டவன் மடியில்: 06 — 06 — 1987

## அமரர் செல்லையா ஞானசுந்தரம்

(இளைப்பாறிய ஆசிரியர்)

திதி: 09-06-1992

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் வாழ்ந்து, எங்களை நல்வழி நடத்தி எம்மை விட்டு நீங்கள் இறைவனடி சேர்ந்து ஐந்து வருடங்களாகியும், உங்கள் நினைவுகள் என்றும் எங்கள் நெஞ்சத்தில் பிரகாசித்துக் கொண்டேயிருக்கும்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்:

அன்புச் சகோதர, சகோதரிகள்,
மைத்துனர், மைத்துனிகள்,
மருமக்கள், பெறாமக்கள்.

கலைவாணி வீதி,
கோண்டாவில் வடக்கு. (21317)

# 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் வேலுப்பிள்ளை சிவசுப்பிரமணியம்

[உரிமையாளர், ராஜா ஸ்ரோர்ஸ் - யாழ்ப்பாணம், சுப்பிரமணியம் சோடாக் கொம்பனி - வல்வெட்டித்துறை]

மலர்வு: 12 - 07 - 1913

உதிர்வு: 25 - 05 - 1988

திதி: 09 — 06 — 1992

நீன்றாண்டு காலமாய் நினைவிலே நின்றெமக்கு
நீங்காது துணை புரிந்து,
தோன்றாத புள்ளியாய் தொலைவிலே மறைந்திட்ட
தூய தலைவா உனக்கு
நான்காண்டு நினைவாக முழு மனதுடனுன்னில்
மூழ்கிய அன்பிலொன்றும்
தோன்றாது துவழ்கின்றோம்;
ஆத்மா சாந்திபெற வேண்டுகின்றோம்.
தோகை மயில் மீதேறு தூய சண்முகப்பெருமானை!

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

ஊரிக்காடு,
வல்வெட்டித்துறை. [4744]

# தெரிவுக் குழுவுக்கு புதிய தலைவரை நியமிக்கவும் அரசு தயங்காதாம்

கொழும்பு, ஜூன் 9

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக் குழுத் தலைவராக மங்கள முனசிங்கா இருக்க விரும்பாது விட்டால் புதிய தலைவர் ஒருவரை நியமித்து, குழுவை இயக்க அரசாங்கம் அபிப்பிராயப்படுவதாக 'சண்டே ஒப்சேவர்' செய்தி வெளியிட்டுள்ளது.

புதிய தலைவரைத் தெரிவு செய்வதற்கான கோரம் குறித்து நாடாளுமன்றம் முடிவு செய்ய சட்டம் இடம் கொடுக்கிறது என்றும் அச் செய்தி தெரிவிக்கிறது (இ-3)

# ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 08 — 05 — 1927



மறைவு: 23 — 05 — 1991

## அமரர் சதாசிவம் கந்தையா

(பரராஜசிங்கம்)

(எச்சாட்டி, சுதுமலை தெற்கு)

திதி: 09 — 06 — 1992

அன்பின் சிகரமே! அருமை அப்பா! அன்பாலும் பண்பாலும், அரவணைத்து வளர்த்தீர்களே! ஆண்டொன்று சென்றாலும் ஆறாது எம் துயர். நீண்டவழி நீங்கள் சென்று இறைவனடி சேர்ந்தாலும் துண்டில் புழுவாய்த் துடிக்கின்றோம். எம்மைப் பிரிந்து ஓராண்டென்ன, ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும் உங்களை நினைதது, உங்கள் உருவம் எம் மனதில் நீங்காமல் நிலைத்திருக்கும். உங்கள் ஆத்மா சாந்தி அடைய இதயம் நெகிழ்ந்து இறைவனை இறைஞ்சுகின்றோம்.

என்றும் உங்கள் நினைவில் வாடும்:

அன்பு மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

எச்சாட்டி,
சுதுமலை தெற்கு,
மானிப்பாய். [21154]

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 05 — 09 — 1908



மறைவு: 23 — 05 — 1991

## அமரர் கந்தையா சண்முகம்

எங்கள் குடும்பத் தலைவராகிய எமது அன்புத் தெய்வமே! எம்முடன் நீங்கள் இருந்த நாட்களில் அன்பிலும், பண்பிலும் உயர்ந்த செயல்கள் பல புரிந்து, திடீரென எம்மை விட்டுப் பிரிந்து, எங்கள் அனைவரின் மனத்திலும் ஆறாத்துயர் தந்த, எம் அன்புத் தெய்வமே! உங்கள் நாவுரைகள் எம் காதில் ஒலிக்கின்றன. உங்கள் வண்ணமுகம் எம் மனக்கண் முன் நிழலாடுகின்றன.

எங்கள் அன்பு ஐயாவே! நீங்கள் தந்திட்ட நினைவுகள், செய்திட்ட தியாகங்கள் என்றும் எங்கள் நெஞ்சில் நிலைத்திருக்கும்! அறிவுரை விளக்காய் தாங்கள் காட்டிய பாதையில் நடக்க எண்ணியுள்ளோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

என்றும் உங்கள் பிரிவால் துயருறும்;

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளை.

''சிவகிரி''
கோணாமலை லேன்,
பொற்பதி றோட்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். [4746]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### அரசே, கவனம்!

விலைவாசி உயர்வுகளை எதிர்த்துக் கொழும்பில் உள்ள தொழிற்சங்கங்கள், கூட்டுத் தொழிற் சங்க நடவடிக்கைகளில் ஈடுபட முடிவு செய்துள்ளன என்பது செய்தி.

நகரப்புறத் தொழிலாளர் மற்றும் உத்தியோகத்தர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இருபத்தொன்பது பெரும் தொழிற் சங்கங்கள் இணைந்துள்ள இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனம் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

ஆனால், அவசரகாலச் சட்டம் நடைமுறையில் இருப்பதால், தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் தமது தொழிலையும், ஏன், சொந்த உடைமைகளைக் கூட இழக்கும் ஆபத்து உண்டு. இத்தகைய ஆபத்துகளின் மத்தியிலும் நகரத் தொழிலாளர்களும் ஊழியர்களும் தொழிற் சங்க நடவடிக்கையில் ஈடுபட முடிவு செய்திருக்கிறார்கள் என்பது ஒரு விடயத்தை நன்றாகத் தெளிவுபடுத்துகிறது.

வாழ்க்கைச் செலவு உயர்வும், விலைவாசிகள் ஏற்றமும் ஏனைய பொருளாதாரக் கஷ்டங்களும் மக்களைப் பெரிதும் பாதிப்பதன் விளைவே தொழிற் சங்கங்களின் இந்த முடிவுக்குக் காரணம் என்பதாகும். இனியும் தாங்க முடியாது, தமது குடும்பத்தவர்கள் வயிறு காய்ந்து சாக அனுமதிக்க இயலாது என்ற எல்லை கடந்த அவல நிலையை எட்டியதன் பிரதிபலிப்பே இந்தத் தீர்மானம் அதனால் தங்கள் தொழிலையும், உடைமைகளையும் தியாகம் செய்தேனும் இதற்கு ஒரு வழி காண வேண்டும் என்ற வன்மமும் ஓர்மமும் அவர்களுக்குப் பிறந்திருக்கிறது.

இத்தகைய போராட்டங்களின் பின்னணியில் எதிர்க் கட்சிகள் நிற்கின்றன என்று கூறி அரசு பாராமுகமாக இருப்பினும் சரி, அல்லது அவற்றை நசுக்க முற்படினும் சரி பாரதூரமான விளைவுகள் தெற்கில் வெடிக்கும்!

நாட்டின் - குறிப்பாகத் தெற்கின் - பொருளாதாரச் சீர்கேட்டினால் விளையும் பாதிப்புகளின் தாக்கங்களை மக்கள் மறந்து போவதற்கு வடக்கு- கிழக்கில் போரைத் தீவிரப் படுத்தி அவர்களின் மனதைத் திசை திருப்பும் தந்திரத்தைத் தொடர்ந்து கையாண்டு அரசு தப்பமுடியாது. அதனையே தொழிற்சங்க சம்மேளனத்தின் முடிவு எடுத்துக் காட்டுகிறது; இடித்துரைக்கிறது! எனவே, அரசே கவனம்!

இந்தக் கட்டத்தில் கூட அரசு திருந்த இடமுண்டு. வடக்கு-கிழக்கு யுத்தத்தை நிறுத்தி அதற்காகும் செலவை நாட்டின் பொருளாதாரத்தைச் சீர்ப்படுத்தப் பயன்படுத்தலாம். 1991 ஆம் ஆண்டில் மட்டும் இராணுவச் செலவு 16,700 கோடி ரூபாவாகும். இவ்வருடச் செலவு இதனை விட மூன்று மடங்காகலாம்!

யுத்தத்தை நிறுத்துவதன் மூலம் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணவும் வழிபிறக்கும்; தென்பகுதி மக்களின் அரசுக்கு எதிரான போராட்டங்களையும் தடுத்து அவர்களுக்கு நிவாரணம் அளிக்கலாம்.

இருபக்கப் போராட்டங்களுக்கும் அரசினால் ஈடு கொடுக்க முடியாது! எத்தனை உத்திகளையும் தந்திரங்களையும் கையாண்டாலும் சறுக்கி விழுந்து மூக்குடைபட நேரிடும். தக்கபடி சிந்தித்து நேரகாலத்துடன் அப்படி ஒரு அவலம் நடக்காமல் அரசு பார்த்துக் கொள்ளுமா?

# புலிகள் மீது இந்தியா விதித்த தடையை இலங்கை மக்கள் பெரிதுபடுத்தவில்லை

பிரபல இந்தியப் பத்திரிகையாளரும் வி. பி சிங் ஆட்சிக் காலத்தில் பிரிட்டனில் இந்தியத் தூதுவராகக் கடமையாற்றியவருமான குல்தீப் நய்யார் 'வரிகளுக்கு இடையில்' (Between the lines) என்ற தலைப்பில் 'சண்டே ஐலண்ட்' பத்திரிகையில் எழுதிய விமர்சனத்தின் தொகுப்பு இது

விடுதலைப் புலிகள் மீது இந்தியா விதித்த தடை இலங்கை மக்கள் மத்தியில் எடுபடவில்லை. அவர்களுக்கு அது ஒரு நிகழ்வாகத் தென்படவில்லை.

புலிகள் மீதான இந்தியாவின் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட மூன்று தினங்களில் நான் கொழும்பில் இருந்தேன்.

இந்தியத் தடை பற்றிய விஷயம் விவாதிக்கப்பட்டு, அலசி ஆராயப்பட்டு கைவிடப்பட்டதொன்றாக நான் கொழும்பில் நின்ற சமயம் காணப்பட்டது.

### சிறிமாவின் நிலை

முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா மட்டுமே இந்தியத் தடையை வரவேற்றார். வேறு எவரும்— புதுடில்லிக்கு ஆதரவான கல்விமான்களும் கூட — இத் தடை பற்றிய விளைவுகளை கருத்திற்கு எடுக்கவில்லை.

''முதலில் அவர்களுக்கு ஏன் பயிற்சி கொடுத்து ஆயுதங்களை வழங்கினீர்கள்'' என்ற கேள்வியுடன் ஒவ்வொரு விவாதமும் முடிந்தது.

### ஜே. ஆரின் நிலை

இலங்கையர்கள் இந்தியாவை நம்பவில்லை என்று முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனா சொன்னார்.

இலங்கையில் அவசரகால நிலை அமுலில் இருக்கிறது. அதனால் விடுதலைப் புலிகள் இயக்கம் சுயமாகவே தடை செய்யப்பட்டுவிட்டது பின்னர் அந்த இயக்கத்தைத் தடை செய்திருப்பதாக வெளியிடும் அறிவிப்பு எதைக் கொண்டு வரப்போகிறது என்று திரு ஜெயவர்த்தனா கேட்டார்.

இந்தியத் தடை மீதான உத்தியோக ரீதியான பதில் நடவடிக்கை மிகவும் கவனமாகக் கையாளப்படுகின்றது.

விடுதலைப் புலிகளை தடை செய்ய கொழும்பு அரசு விரும்பவில்லை போல் தெரிகிறது.

தெரிவுக்குழுத் தலைவர் மங்கள முனசிங்கா இதனை உறுதி செய்கிறார். விடுதலைப் புலிகளினால் ஏற்றுக் கொள்ளப்படக் கூடியதான திட்டம் ஒன்றை உருவாக்கும் முயற்சியில் பல யோசனைகளை தெரிவுக் குழு ஆராய்ந்து வருகின்றது.

### பிரேமதாஸா

ஜனாதிபதி பிரேமதாஸாவும் எல்லா நம்பிக்கைகளையும் தெரிவுக் குழுவில் தான் வைத்துள்ளார்.

மங்கள முனசிங்கா ஜனாதிபதி பிரேமதாஸாவுடன் நெருக்கமான தொடர்பு வைத்துள்ளார்

தெரிவுக்குழு காணும் தீர்வை விடுதலைப் புலிகள் இயக்கம் நிராகரித்தாலும் கூட, அத் தீர்வை மூன்று மாதங்களுள் அரசாங்கம் ஒரு தலைப்பட்சமாக (Unilaterally) அமுல் நடத்தும் என்று மங்கள முனசிங்கா கூறுகிறார்.

தெரிவுக்குழுவின் தலைவர் கொண்டுள்ள நம்பிக்கைக்கு என்ன காரணங்கள் இருப்பினும் தரை நிலவரம் ஏமாற்றமளிப்பதாகவே உள்ளது.

இலங்கையின் வடபகுதி மீது கொழும்பு அரசின் கட்டுப்பாடு கிடையாது. வட பகுதி (Defacto Eelam, an independent Tamil State) சுதந்திர தமிழ் ஈழமாகவே உள்ளது.

விடுதலைப் புலிகள் வரிகள் வசூலிக்கின்றனர்; நிர்வாகத்தை நடத்துகின்றனர். பாஸ்போர்ட்டுக்களையும் வழங்கி வருகின்றனர். இந்த நிலையில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஒத்துழைப்பின்றி ஒரு தீர்வை அமுல் நடத்த முடியும் என்பதை என்னால் சிந்தனை செய்து பார்க்க முடியவில்லை.

மறுபக்கத்தில் — நாடாளுமன்றத் தெரிவுக்குழு பிரிந்து நிற்கிறது.

வடக்கு— கிழக்கு இணைப்பு என்ற தமிழர் கோரிக்கை, கிழக்கு மாகாணம் தனியாக இருக்க வேண்டும் என்ற முஸ்லிம் நிலைப்பாடு, ஆகியன குறித்தும் எப்படி இணக்கம் காணுவது என்பது குறித்தும்

## வட பகுதி சுதந்திர தமிழீழமாகவே உள்ளது

தெரிவுககுழு இன்னும் தீர்மானத்துக்கு வரவில்லை.

கிழக்கில் முஸ்லிம்களும், சிங்களவர்களும் சேர்ந்து 60 சத வீதமாக உள்ளனர். தமிழர் 40 சத வீதமாக உள்ளனர். ராஜீவ் - ஜே. ஆர் உடன் படிக்கையின்படி இணைப்பு தற்காலிகமானது. அது நிரந்தரமாக சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும்.

அப்படி இருந்தும் — இணைப்பு நிரந்தரமாக்கப் பட்டால் கூட தமது தமிழீழக் கோரிக்கையை விடுதலைப் புலிகள் கைவிடுவார்களா? என்பது நிச்சயமான தொன்றல்ல.

வடக்குக்கு சுயாட்சி வழங்குவதன் மூலம் விடுதலைப் புலிகளை வழிக்கு கொண்டு வரலாம் என்று சில தலைவர்கள் நம்புகின்றனர்.

'' இந்திய அரசியல் சட்டத்தின் [370 ஆவது ஷரத்தின்] கீழ் ஜம்மு - காஷ்மீர் மாநிலத்துக்கு விசேட அந்தஸ்து வழங்கிய வழியைப் பின்பற்றலாம் என்று, தன்னை அடையாளங் காட்டிக் கொள்ள விரும்பாத சிங்களத் தலைவர் ஒருவர் சொன்னார்.

பிரிக்கப்படாத வடக்கு — கிழக்கு மாகாணத்தைக் கொடுப்பது ஐக்கிய இலங்கை ஒன்றை வைத்துக் கொள்வதற்கு வழங்கப்படும் அதிக விலையாக கருதப்படவில்லை.

### தொண்டாவின் யோசனை

திட்டவட்டமான, முறையான தீர்வுக்கான யோசனைகள் சமர்ப்பிக்கப்பட்டால் அதனை விடுதலைப் புலிகள் ஏற்றுக் கொள்வார்கள் என்று அமைச்சர் தொண்டமான் நம்புகின்றார்.

சுயாட்சி அமைப்பும் மாகாணங்களுக்கு உண்மையான அதிகாரப் பகிர்வுமே அவரது யோசனை ஆகும்.

இந்திய — இலங்கை உடன்படிக்கைக்குப் பிறகும் மாகாணங்களுக்கு அதிகாரங்கள் மாற்றப்படவில்லை என்பதை பலரும் ஏற்றுக் கொள்கின்றனர். இலங்கையின் இராணுவ நடவடிக்கையை நிறுத்துமா படுகொலை என்று புதுடில்லி எப்போது அறிவிக்கும் என்பது தெரியாத ஒரு நிச்சய [illegible] கொழும்பு அரசு உள்ளது.

யாழ் கோட்டையை இலங்கைத் துருப்புகள் சுற்றி வளைத்த போது, அப்போதைய இந்தியத் தூதர் டிக்ஸிற் தம்மைச் சந்தித்து, இந்தியா அமைதியாகப் பார்த்துக் கொண்டிராது என்ற புதுடில்லியின் எச்சரிக்கையைக் கவனத்துக்கு எடுத்துக் கொள்ளும்படி தெரிவித்தார் என்று திரு. ஜே ஆர். ஜெயவர்த்தனா எனக்கு நினைவு படுத்தினார்.

அமைதிப்படையை அனுப்ப ராஜீவ் எடுத்த முடிவு கடவுள் அனுப்பிய சந்தர்ப்பம் என்று ஜெயவர்த்தனா நினைவு கூர்ந்தார்.

'தமது படைகளை மேலும் 2 மாதங்கள் செயற்படவிட்டிருப்பின் விடுதலைப்புலிகள் பிரச்சினை தீர்ந்து போய் இருக்கும்'— என்றும் அவர் கூறினார்.

### கருணாநிதியின் தயக்கம்

இராணுவத் தெரிவை நிராகரிக்கும் இலங்கைத் தலைவர்கள், விடுதலைப் புலிகளுடனான மோதலை அரசியல் தீர்வு ஒன்றின் மூலம் தான் முடிவுக்குக் கொண்டு வர முடியும் என்று உணர்ந்துள்ளனர்.

இதற்கு 'இந்தியாவில் உள்ள சிலர் உதவ முடியும்' என்று பல அரசியல்வாதிகள், கல்விமான்கள், பத்திரிகையாளர்கள் தெரிவித்தனர்.

நான் குறிப்பாக தி. மு. க தலைவர் கருணாநிதியின் பெயரைப் பிரஸ்தாபித்தேன்.

நான் சென்னையில் திரு கருணாநிதியைச் சந்தித்து இலங்கை நிலைமை பற்றி விசாரித்தேன்.

அதற்கு திரு. கருணாநிதி, 'ஏற்கனவே எனது விரல்களைச் சுட்டுக் கொண்டு விட்டேன். கடந்த காலத்தில் என்னை தவறாகப் புரிந்து கொண்டு விட்டார்கள். நான் இதில் சம்பந்தப்பட விரும்பவில்லை' என்று சொன்னார்.

'தடை விதிக்கப்பட்ட பின்னர் விடுதலைப் புலிகளுடன் பேசுவது கூட சட்ட விரோதமானது'— என்று கருணாநிதி சொன்னார்.

'ராஜீவ் கொலையில் என்னையும் சம்பந்தப்படுத்த அரசு முயற்சி செய்தது'— என்றும் அவர் சொன்னார்.

முன்னர் விடுதலைப் புலிகளுக்கு உதவுவது புதுடில்லி அரசின் கொள்கையாக இருந்ததால் இந்தியாவில் உள்ள அரசியல் கட்சிகளும் கடந்த காலத்தில் விடுதலைப் புலிகளுக்கு உதவி வந்தன என்பதே உண்மையாகும்.

பாகிஸ்தானில் இருந்து சுதந்திரம் பெற பங்களா தேசத்தவருக்கு இந்தியா உதவியது என்ற உணர்வு பொதுவாக இருந்தது. அதனால் தமிழகத்தில் தொடர்ச்சியாக பதவி வகித்து வந்த அரசுகளும் புதுடில்லியின் கொள்கைக்கு ஏற்ப அப்போது நடந்து வந்தன.

இப்போது நிலைமை மாறி விட்டது இந்த நேரத்தில் குறிப்பிட்ட போராளிக் குழுவுக்கு உதவி செய்வதாக ஒருவர் எவர் மீதும் (அடுத்தவர் மீது) குற்றஞ் சாட்டுவது தன்னைச் சிறந்தவனாகக் காட்டிக் கொள்ளும் ஒரு செயலே தவிர வேறு ஒன்றும் அல்ல.

### ஜெயலலிதாவின் அன்றைய நிலை

ராஜீவ் காந்தி கொலை செய்யப்படுவதற்கு 6 மாதங்களுக்கு முன்னர் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசுகையில் —

இலங்கை அரசுக்கு எதிரான தற்போதைய போராட்டத்தில் விடுதலைப் புலிகள் இயக்கம் தோற்கடிக்கப்பட்டால் அத்தீவில் உள்ள தமிழ் இனமே அழிந்து விடும்'' — என்று தற்போதைய முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா எச்சரித்து இருந்தார்.

உண்மையான குற்றம் புதுடில்லியின் தோள்களில் தான் உள்ளது.

ஆட்சி பீடத்தில் ஜெயவர்த்தனா இருப்பது பிடிக்காத காரணத்தினால் தான் இந்திரா காந்தி தமிழ்ப் போராளிகளுக்கு ஆயுத நிதி உதவி அளித்து வந்தார் என்று சிறிமாவோ கூறுகின்றார்.

அதுவும், ஒரு காரணமாக இருக்கலாம் என்று கூறும் ஜெயவர்த்தனா, அப்போதைய முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரனைச் சாந்தப்படுத்தவே இந்திரா காந்தி விடுதலைப் புலிகளுக்கு ஆதரவளித்தார் என்று தாம் சந்தேகப்படுவதாகத் தெரிவித்தார்.

காரணங்கள் எப்படி இருப்பினும், இலங்கையும், இந்தியாவும் பரிகாரம் காண முடியாத நிலையை எதிர்நோக்குகின்றன.

ஏதாவது ஒன்று உருவாகி வரும் வரை அதனுடனேயே வாழ்வது என்று கொழும்பு தீர்மானித்து விட்டது போன்று காணப்படுகிறது.

இந்தியாவைப் பொறுத்தவரை, பிரபாகரனை நாடு கடத்தும் கோரிக்கையை வைத்து இலங்கை மீதும் விடுதலைப் புலிகள் மீதும் ஊசியை ஏற்றிய வண்ணம் இருக்கும்.

இந்தியாவில் இருந்த பிரபாகரனைத் தம்மிடம் ஒப்படைக்கும் படி இலங்கை அப்போது இந்தியாவைக் கோரியது. இந்தியா அதனை ஏற்கவில்லை. இப்போது இந்தியா, பிரபாகரனைக் கைது செய்யும்படி இலங்கையைக் கேட்கிறது. ஆனால் ஒரு வித்தியாசம் உண்டு பிரபாகரனைக் கையளிக்கக் கூடிய நிலையில் இருந்த இந்தியா அப்போது அப்படிச் செய்யவில்லை; ஆனால் இப்போது கொழும்பு அரசினால் பிரபாகரன் எங்கிருக்கிறார் என்று கண்டுபிடிக்கவே முடியாமல் உள்ளது.

''சந்தனக்கட்டை கடத்தலில் ஈடுபட்டுள்ள வீரப்பனையே உங்களால் கைது செய்ய முடியவில்லை. பிரபாகரனை நாம் கைது செய்ய முடியும் என்று எப்படி நீங்கள் எதிர்பார்க்க முடியும்'' — என்று கேட்டார் தொண்டமான்.

இது புதுடில்லி அரசுக்கு புரிவதாகத் தெரியவில்லை. பதிலளிக்கக் கூடிய கேள்வி ஒன்று இல்லை என்பது போன்று புதுடில்லி நடந்து கொள்கிறது.

தான் கணக்குக் காட்ட வேண்டியதில்லை என்று 'றோ' கருதுகிறது அதிகார வர்க்கத்தைப் பொறுத்த வரையில் ஆட்சி அதிகாரத்தில் குற்றவாளிகள் இன்றும் உட்கார்ந்திருக்கின்றார்கள்.

எப்போதோ ஒரு நாள் கதை வெளியே வரும் அந்த நாள் வரும்போது, அனைத்து இந்தியர்களும் தங்கள் தலைகளை வெட்கத்தில் தொங்க விட்டுக் கொண்டிருக்கும் நிலை ஏற்படும்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிரணி கேள்விகளுக்கு அமைச்சர்கள் பதிலளிப்பர்

கொழும்பு, ஜூன் 9

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி எம். பிக்கள் எழுப்பும் கேள்விகளுக்கு அமைச்சர்கள் பதிலளிப்பர்.

அரசாங்கம் இப்படி முடிவு செய்துள்ளதாக 'சண்டே ஐலண்ட்' செய்தி தெரிவிக்கின்றது.

இன்று செவ்வாயன்று மீண்டும் நாடாளுமன்றம் கூடும்போது எதிர்க்கட்சியினர் எழுப்பும் கேள்விகளுக்கு அமைச்சர்கள் பதிலளிப்பார்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அரசு அலுவல்களை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற எதிர்க்கட்சி எம். பிக்கள் ஒத்துழைக்க மறுத்ததைத் தொடர்ந்து அமைச்சர்கள் எதிர்க்கட்சி எம். பிக்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்க மறுத்து வந்தனர்.

கடந்த வியாழக்கிழமை சபாநாயகர் கூட்டிய கட்சித் தலைவர்கள் கூட்டத்திற்கு ஆளுங்கட்சியினர் சமுகமளித்தனர். அதற்கு முதல் அப்படியான கூட்டங்களை ஆளுங்கட் பகிஷ்கரித்து வந்தது.

வியாழன் சபாநாயகர் தலைமையில் நடந்த கூட்டத்தில்— நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிடம் தேர்தல் ஆணையாளரின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அந்த அறிக்கை மீது நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்த ஆளுங்கட்சி இணக்கம் தெரிவித்ததாகத் தெரிய வருகின்றது.

அந்த அறிக்கை பற்றிய விவாதத்தை நடத்த முதலில் அரசு மறுப்புத் தெரிவித்து வந்தது. [இ-எ]

## மரண அறிவித்தல்கள்

### தம்பையா கோபாலசிங்கம்

(ஓய்வுபெற்ற தாதி - யாழ். போதனா வைத்தியசாலை]

தம்பையா கோபாலசிங்கம் காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற தம்பையா வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், தங்கரத்தினத்தின் (ஓய்வுபெற்ற ஊழியர், சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலை) அன்புக் கணவரும், கெங்காதரன், கெங்காதேவி, கேசவதேவி, கேதீஸ்வரன், கோடீஸ்வரன், கோணேஸ்வரன், கோகிலாதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், அன்னபூரணத்தின் அன்புச் சகோதரரும், லோகநாயகி, தில்லைநாதன், சாந்திமதி, இரத்தினசிங்கம், சசிகலா, அமுதா, நந்தகோபன், இரகுநாதன், சிவமணி ஆகியோரின் அன்பு மாமனாரும், அழகராசாவின் அருமை மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 23/1, முதலியார் ஒழுங்கையில் உள்ள இல்லத்தில் இருந்து தகனக் கிரியைகளுக்காக இன்று 09 - 06 - 92 செவ்வாய்க்கிழமை காலை 10 - 00 மணிக்கு அரியாலை சித்துப் பாத்தி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
23/1, முதலியார் ஒழுங்கை, கா இரகுநாதன்
நல்லூர் தெற்கு,
யாழ்ப்பாணம். [21325]

### முருகையா ஜெயச்சந்திரன்

குருநாத சுவாமி கோவிலடி தெல்லிப்பழையைச் சேர்ந்த முருகையா ஜெயச்சந்திரன் [பூஸ்] 1-6-92 அன்று அகாலமரணமடைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அன்றைய தினம் நாகேஸ்வரி வித்தியாசாலை வீதி, சுன்னாகத்தில் நடைபெற்றன என்பதை அறியத்தருகிறோம்.

தகவல்:
முருகையா
[தந்தை]
[20590]

### இளையதம்பி தம்பிராசா

[முன்னாள் நிறைவேற்று பொறியியலாளர், பெருந்தெருக்கள் திணைக்களம், மன்னார்]

வயாவிளானைப் பிறப்பிடமாகவும், தட்டாதெருவை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி தம்பிராசா காலமானார். இவர் விமலாதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சுகுமாரன், சுகந்தினி [யாழ். பல்கலைக்கழகம் - வர்த்தகபீடம் - 3 ஆம் வருடம்], சுதர்சன் [யாழ். இந்துக் கல்லூரி], தர்சினி [கொக்குவில் இந்துக் கல்லூரி] ஆகியோரின் அருமைத் தகப்பனாரும், காலஞ்சென்ற வல்லிபுரம் இளையதம்பி தம்பதியின் அருமை மகனும், காலஞ்சென்ற த. சின்னதம்பி - திருமதி சின்னதம்பி இராசரத்தினம் ஆகியோரின் மருமகனும், இளையதம்பி தம்பிஐயாவின் சகோதரரும், மு. கருணாகரன், திருமதி உதயகுமார் சுசிலாதேவி, மு. ரவிந்திரன், திருமதி மகேசன் ரோகினிதேவி, திருமதி சாந்தகுமார் கமலேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று [9-6-92] நண்பகல் 12-00 மணிக்கு 548/2 காங்கேசன்துறை வீதி, தட்டாதெரு இல்லத்தில் இருந்து தகனக்கிரியைகளுக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்:
548/2, கே. கே. எஸ். வீதி, இ சுதர்சன் [மகன்]
தட்டா தெரு. [21328]

## நோயாளிகள் வந்தனர்

புங்குடுதீவு 7 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த இரண்டு பெண் நோயாளிகள் குமண கப்பல் மூலம் யாழ் வைத்தியசாலைக்கு நேற்று கூட்டி வரப்பட்டனர். (உ-165]

## யாழ்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடற்படையினரின் தாக்குதலுக்கு இரு மீன்பிடிப்படகுகள் இலக்காகின என்றும், அவற்றில் ஒரு படகு மட்டும் கரை ஒதுங்கியது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கரை ஒதுங்காத படகில் இருந்த மூவரிலேயே ஒருவர் இன்னும் கரை சேரவில்லை.

சேதமடைந்த நிலையில் கரை ஒதுங்கிய மற்றைய படகில் இருந்தவர்களில் இருவர் காயம் அடைந்துள்ளனர்.

இறந்த மரியாம்பிள்ளை மரியராசாவின் மகன் ஜோன் கபாஸ் [வயது 14] மற்றும் அருளானந்தம் இருதயராசா [வயது 33] ஆகியோரே காயம் அடைந்த இருவரும் ஆவர். [ஒ-162-51-15]

## வடக்கு ..

(1 ஆம் பக்கம் தொடர்ச்சி)

சமர்ப்பிக்கவில்லை.

★ இனப் பிரச்சினை தொடர்பாக ஜனாதிபதியும், பிரதமரும் ஒன்றுக்கொன்று முரண்பாடான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

★ இனப்பிரச்சினை குறித்து ஐக்கிய தேசியக் கட்சியினரால் ஒரே குரலில் பேசமுடியாதுள்ளது, அவர்கள் முற்றுமுழுதான குழப்ப நிலையில் உள்ளனர். ஜனாதிபதி ஒன்றைச் சொல்கிறார்; பிரதமர் இன்னொன்றைச் சொல்கிறார்.

★ பிரதான எதிர்க்கட்சி என்ற முறையிலும், தெரிவுக் குழுவின் தலைமையை ஏற்றுள்ள கட்சி என்ற முறையிலும் அரசு எடுத்துள்ள நிலைப்பாடு பற்றி நாம் அதிசயப்படுகிறோம்.

★ நாடாளுமன்றத் தெரிவுக் குழு எமது முயற்சியினால் உருவானதொன்று. அது உடைந்து போவதற்கு நாம் விடமாட்டோம்.

★ தெரிவுக் குழுவிடம் எல்லா அரசியல் கட்சிகளும் சாட்சியம் அளித்துவிட்டன. இப்போது நாம் இரண்டு விடயங்களை ஆராய்ந்து வருகின்றோம்.

— ஒன்று: வடக்கு - கிழக்கு இணைப்பு; இரண்டாவது: அரசியல் பரவலாக்கல் அமைப்பு.

★ இந்த இரண்டு விடயங்கள் குறித்தும் கட்சிகள் கடுமையான அபிப்பிராயங்களை வெளியிட்டுள்ளன. அவை குழப்பகரமான அம்சங்கள்.

## சுதந்திரக்...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

விருப்பதாக அறிவித்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை— ஜனாதிபதியாக ஜெயவர்த்தனா இருந்தபோது ஐக்கிய தேசியக் கட்சிக்கு முழுநேரச் செயலாளர் ஒருவரை நியமித்தது போன்று சுதந்திரக் கட்சிக்கும் முழுநேரச் செயலாளர் ஒருவரை நியமிக்க வேண்டும் என்று திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா வற்புறுத்தி வருகின்றாராம்.

பிரபல வழக்கறிஞர் அனில் ஒபயசேகராவின் பெயரை அவர் இப்பதவிக்குச் சிபார்சு செய்திருக்கிறார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதே நேரத்தில்— கட்சியின் பதவிகளுக்கு போட்டி ஏற்படுமானால் தாமும் தமது ஆதரவாளர்களை எல்லாப் பதவிகளுக்கும் நிறுத்தப்போவதாகவும் திரு மதி பண்டாரநாயக்கா அறிவித்துள்ளார். [த-எ]

# காங்கேசனுக்கு வாகன அணி இப்போதைக்கு செல்லாது

யாழ்ப்பாணம், ஜூன் 9

காங்கேசன்துறை உணவுக் களஞ்சியத்தில் இருந்து உணவுப் பொருள்கள் ஏற்றி வருவதற்கான வாகன அணி இப்போதைக்கு அங்கு செல்லும் சாத்தியமில்லை என தெரிவிக்கப்பட்டது.

வலி. வடக்குப் பகுதியில் இராணுவ நடவடிக்கைக்காக அமுல் செய்யப்பட்ட ஊரடங்கு இன்னமும் நீக்கப்படாததே, வாகன அணி செல்ல பிரதான தடை என்று செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

வாகன அணி வழக்கமாகச் செல்லும் சேந்தாங்குளம்— கீரிமலைப் பகுதி தாக்குதலற்ற பிரதேசமாக முன்னர் பிரகடனப்படுத்தப்பட்டிருந்தது. ஆனால் அப்பகுதியில் விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் இடம்பெற்றிருப்பதால் தாக்குதலற்ற பிரதேசம் தொடர்பான பிரகடனம் காலாவதியாகிவிட்டது என்றும்—

எனவே மீண்டும் அரச தரப்புடனும் விடுதலைப் புலிகளுடனும் பேச்சு நடத்தி இணக்க நிலை ஏற்படுத்த வேண்டியுள்ளது என்றும் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த விவகாரம் தொடர்பாக செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகள் தொடர்ந்து பேச்சு நடத்தி வருவதாக அறியவந்தது.

# வன்முறைகளுக்கு மத்தியில் இந்திய இடைத்தேர்தல்கள்

புதுடில்லி, ஜூன் 9

இந்தியாவில் நேற்று நடைபெற்ற இடைத் தேர்தல்களின் போது வன்செயல்கள் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பீஹாரில் பலத்த பாதுகாப்புக்கு இடையில் நடைபெற்ற சட்டசபை இடைத் தேர்தல்களின் போது பாதுகாப்பை மீறி வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றன; குண்டுகள் வெடித்தன.

புதுடில்லி தெற்கு நாடாளுமன்றத் தொகுதியில் இடைத் தேர்தல்களின்போது ஏற்பட்ட வன்முறைகளில் 12 பேர் காயமடைந்தனர்.

இதேவேளை ராஜஸ்தான் மாநிலத்தில் கடந்த சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் இந்து மதப் பிரிவுகளிடையே இடம்பெற்ற மோதல்களில் 17 பேர் உயிரிழந்தனர். அங்கு கலவரங்களைக் கட்டுப்படுத்த ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளது. [உ-10]

## ஐ. நாவுக்கு மகஜர் அனுப்ப முடிவு

யாழ்ப்பாணம், ஜூன் 9

ஆலயங்கள், ஆஸ்பத்திரிகள், அகதி முகாம்கள், பாடசாலைகள் மீது தாக்குதல் நடத்துவது குறித்து ஐக்கிய நாடுகள் சபைக்கும் ஏனைய சர்வதேச அமைப்புகளுக்கும் மகஜர் அனுப்புவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

சர்வ சமய, சமூக ஒன்றியத்தின் ஆலோசனைக் கூட்டம் நேற்று நடந்தபோது இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இதேவேளை, இனிமேல் ஆலயங்கள் எதுவும் தாக்கப்பட்டால், மேற்கொண்டு எடுக்க வேண்டிய போராட்ட நடவடிக்கை குறித்து அப்போது ஆராய்வது என்றும் தீர்மானிக்கப்பட்டது!

கடந்த புதன்கிழமை நல்லை ஆதீனத்தில் நடந்த முதலாவது ஆலோசனைக் கூட்டத்தில்—

ஆலயங்கள் மீதான தாக்குதலுக்கு எதிரான பேரணி வடிவத்திலான வெகுசனப் போராட்டத்தை அரசு அசட்டை செய்யும் பட்சத்தில்—

பலாலி இராணுவ முகாமை முற்றுகையிட்டு நியாயம் கேட்பது — என்று முடிவு செய்யப்பட்டிருந்தது தெரிந்ததே! [அ-3]

## தொண்டர்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிதிகள் அவற்றைப் பரிசீலனை செய்த பின்னர் நிரந்தர நியமனங்கள் வழங்கப்படும் என்றும் இணக்கம் காணப்பட்டதாக தொண்டர் ஆசிரியர் சங்க வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

கொழும்பில் கல்விச் சேவைகள் ஆணைக்குழுத் தலைவர் திரு. ஜோர்ஜ் மெண்டிஸ், ஆணைக்குழு உறுப்பினர் திரு. ஜி. ஜெயக்குமார், திரு. வீரரத்தின, அமைச்சர் தொண்டமான் உட்பட பல தொழிற்சங்கப் பிரதிநிதிகளையும் தொண்டர் ஆசிரியர் தூதுக்குழுவினர் சந்தித்தனர். [உ-3]

## துர்க்காபுரம் மகளிர் இல்லம் இடம் மாற்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 9

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் பராமரிப்பில் இயங்கிவந்த, துர்க்காபுரம் மகளிர் இல்லப் பிள்ளைகள், அவர்களின் பாதுகாப்பையும் கல்வி வசதியையும் முன்னிட்டு கடந்த வியாழன் முதல் மருதனார்மடம் இரமநாதன் கல்லூரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மகளிர் இல்லப் பிள்ளைகளுடன் தொடர்பு கொள்ள விரும்புபவர்கள் இராமநாதன் கல்லூரிக்குச் சென்று தொடர்பு கொள்ளலாம் என்று அறிவிக்கப்படுகிறது. [த]

## ஹெலி ஓட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 9

பலாலிக்கும், தீவுப் பகுதிக்கும் இடையில் நேற்றுக் காலை முதல் ஹெலிகள் அடிக்கடி சென்ற வண்ணம் இருந்தன. [உ-3)

## திருட்டு

குருநகர், ஜூன் 9

குருநகரில் குடிநீர் பெறும் பொதுக் கிணறொன்றில் பொருத்தப்பட்டிருந்த மூவாயிரம் ரூபா பெறுமதியான வாளி, கப்பி, வாளி பொருத்தப்பட்டிருந்த சங்கிலி ஆகியன திருட்டுப் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் கடந்த வெள்ளி இரவு நடைபெற்றுள்ளதாகவும் இதற்கு முன்பும் இவ்வாறு திருட்டு நடைபெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது. [த-5]

## குழமுனை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை —

குழமுனைப் பகுதியில் நேற்று நடந்த சண்டையில் மூன்று படையினர் உயிரிழந்ததாகவும் எட்டுப் படையினர் காயமடைந்ததாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் நேற்றிரவு தெரிவித்தன. [உ-எ-த-10-3]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 392/3 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 09 - 06 - 1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org